அப்படி அவர்கள் தங்குவதனால் அதிக அளவில் டாக்டர்கள், உதவியாளர்கள் அங்கே இருக்கவும் வேண்டியிருக்கிறது. ஆகவேதான் சென்னையில் இந்தக் குழுக்கள் இரண்டு இருந்தாலும் ஒரு தாலுக்கா, இரண்டு தாலுக்காவுக்கு ஒரு இடத்தில் முகாமிட்டு அந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் சிகிச்சை அளிக்கிறார்கள். சென்னையில் உள்ள இரண்டு குழுக்கள், சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களையும், வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களையும், மதுரையில் உள்ள மூன்று குழுக்கள் தஞ்சை, திருச்சி, கிழக்கு இராமநாதபுரத்தையும், கோயம்புத்தூர், நீலகிரி, சேலத்தையும், மதுரை, மேற்கு இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரியையும் கவனித்துக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

*Leprosy Hospital at Colachel.*

*95 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is being given to the Colachel Leprosy Hospital in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof for the years 1970–71–72?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் ரூ. 54,054-ம் 1971-72-ம் ஆண்டில் ரூ. 51,894-ம் மொத்த அரசு மானியமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சார்லஸ் பீஸ் நினைவு மருத்துவ மனைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரியார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

### (2) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.